# அரசமைப்பு (நூற்று மூன்றாம் திருத்தச்) சட்டம், 2019

**[2019, ஜனவரி 12]**

இந்திய அரசமைப்பை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்பதாம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

1\. (1) இந்தச் சட்டம், அரசமைப்பு (நூற்று மூன்றாம் திருத்தச்) சட்டம், 2019 என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும், அத்தகைய தேதியன்று செல்லாற்றல் பெறும்.

2\. அரசமைப்பின் 15 ஆம் உறுப்பில், (5) ஆம் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:- 15ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

‘ (6) இந்த உறுப்பிலோ அல்லது 19 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறின் (எ) உட்கூறிலோ அல்லது 29 ஆம் உறுப்பின் (2) ஆம் கூறிலோ உள்ள எதுவும்—

(அ) (4) மற்றும் (5) ஆகிய கூறுகளில் குறிப்பிடப்பட்ட வகுப்பினர் அல்லாத பிற குடிமக்களில் பொருளியல்நிலையில் நலிந்த பிரிவினரின் மேம்பாட்டிற்காக தனியுறு வகையம் எதனையும்; மற்றும்

(ஆ) (4) மற்றும் (5) ஆகிய கூறுகளில் குறிப்பிடப்பட்ட வகுப்பினர் அல்லாத பிற குடிமக்களில் பொருளியல் நிலையில் நலிந்த பிரிவினரின் மேம்பாட்டிற்காக 30 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறில் சுட்டப்பட்ட சிறுபான்மையினர் கல்வி நிலையங்கள் அல்லாத பிற அரசு உதவிபெறும் அல்லது உதவிபெறாத தனியார் கல்வி நிறுவனங்கள் உள்ளடங்கலான கல்வி நிலையங்களில், அவர்களைச்

சேர்த்துக்கொள்வதற்கு, தனியுறு வகையங்கள் எவையும் எந்த அளவுக்குத் தொடர்புடையதாயிருக்கிறதோ அந்த அளவுக்கு, அவை ஒதுக்கீடு செய்யப்படும் நேர்வில், இருந்துவரும் ஒதுக்கீடுகளுக்குக் கூடுதலாக மற்றும் ஒவ்வொரு வகையிலும் மொத்த இடங்களில் பத்து விழுக்காடு என்ற மேல்வரை ஒன்றுக்கு உட்பட்டு, அத்தகைய தனியுறு வகையம் எதனையும்,

– அரசு செய்வதற்குத் தடையூறு ஆகாது.

விளக்கம்:- இந்த உறுப்பின் மற்றும் 16ஆம் உறுப்பின் நோக்கங்களுக்கு, "பொருளியல் நிலையில் நலிந்த பிரிவினர்" என்பவர், குடும்ப வருமானம் மற்றும் பிற பொருளியல் பாதக குறியீடுகள் ஆகியவற்றின் அடிப்படையில் அவ்வப்போது அரசால் அறிவிக்கை செய்யப்படலாகிறவாறு இருப்பர்.'.

3. அரசமைப்பின் 16 ஆம் உறுப்பில், (5) ஆம் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 16 ஆம் உறுப்பிற்கான திருத்தம்.

(6) இந்த உறுப்பிலுள்ள எதுவும் (4) ஆம் கூறில் குறிப்பிடப்பட்ட வகுப்பினர் அல்லாத பிற குடிமக்களில் பொருளியல்நிலையில் நலிந்த பிரிவினரின் நலச்சார்பாக, இருந்துவரும் ஒதுக்கீட்டிற்குக் கூடுதலாக மற்றும் ஒவ்வொரு வகையிலும் பத்து விழுக்காடு பணியடைகள் என்ற மேல்வரை ஒன்றுக்கு உட்பட்டு, பதவியமர்த்தங்களை அல்லது பணியடைகளை ஒதுக்கீடு செய்வதற்கான வகையம் எதனையும் அரசு செய்வதற்குத் தடையூறு ஆகாது.